24.02.2026.

OS.467/2024

DW1-சங்கர்லால் – த/பெ. வெள்ளைச்சாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

குறுக்கு விசாரணை : (வாதிகள் தரப்பில்)

1. நான் இடம் வாங்கி விற்கும் இடைத்தரகர் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்திற்கு அடுத்த கீழ்புறம் சர்வே எண்.283 ல் உள்ள நிலம் உள்ளது என்றால் சரிதான்.

3. என் எதிர்கோரிக்கையின் சொத்து விவரத்தில் கிழக்கு பக்கமாக சர்வே எண்.283 உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படுவது சர்வே எண்.283 ற்கான இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட புலவரைபடம் என்றால் சரிதான். சர்வே எண்.283 ன் புல வரைபடம் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. தாவா சொத்தின் கீழ்பக்கமாக புல எண்.283/5 ல் உள்ள நிலம் உள்ளது என்றால் சரிதான்.

6. என் தாயார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் கீழ்பக்க எல்கையாக என் தாயார் மங்களேஸ்வரி (க/பெ. வெள்ளைச்சாமி) இருப்பு சொத்து என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. எனவே என் எதிர்கோரிக்கையில் கீழ்பக்கமாக வெள்ளைச்சாமி இடம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.283/5ன் இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா நகல் என்றால் சரிதான். இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. வா.சா.ஆ.12 வெள்ளைச்சாமி பெயரில் இல்லை என்றும் ராமசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

10. என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.283/5ன் இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்க சான்று நகல் என்றால் சரிதான். இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்க சான்று வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. வா.சா.ஆ.12 வெள்ளைச்சாமி பெயரில் இல்லை என்றும் ராமசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ.12 ஆவணத்தில் மேற்கு பக்கமாக பாக்கியநாத நாடார் இடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது தவறு தங்கச்சாமி நாடார் தான் இருந்தார் அதன் பின் என் தகப்பனார் வெள்ளைச்சாமி பெயர் வந்தது.

13. என் தகப்பனாருக்கு வழக்கு சொத்திற்கு கீழ்பக்கமாக எந்த இடமும் இல்லை என்றால் சரியல்ல.

14. என் தாயார் மங்களேஸ்வரி பெற்ற கிரைய ஆவணத்தில் சொத்து விவர எல்கை மால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எல்கை மாலின் படி கிரைய சொத்து வேறு சொத்து என்று சொன்னால் சரியல்ல.

15. தபசில் சொத்தானது 1ம் வாதியின் கணவர் பெயரில் தான் UDR பட்டா உள்ளது என்றும் எனவே வழக்கு சொத்து 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

16. என் தாயார் வழக்கு சொத்தை கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல.

17. என் தாயார் தவறான சொத்தைப் பொறுத்து எனக்கு ஏற்பாட்டு ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும் எனவே எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

18. எதிர் கோரிக்கை சொத்தை பொறுத்து என் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் பெயரில் பட்டா உள்ளது.

19. எதிர் கோரிக்கை சொத்து விவரம் தவறானது என்றும் என் எதிர்கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல என்றும் என் எதிர்கோரிக்கையை

தள்ளுபடி செய்து வாதியின் வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி